
தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 183 | 4 Pages | 30.1.2025 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 183 | 4 பக்கங்கள் | 30.1.2025 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ**
**மன்னுயிர்க் கின்னா செயல்**

**விளக்கம்:**
**தன் உயிருக்குத் துன்பமானவை இவை என்று உணர்ந்தவன், அத் துன்பத்தை மற்ற உயிருக்குச் செய்தல் என்ன காரணத்தாலோ.**

# 21 சமூகநீதி போராளிகளின் மணிமண்டபம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

விழுப்புரம், ஜன.30

தமிழக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், 2 நாள் பயணமாக விழுப்புரம் மாவட்டத்திற்கு நேற்று மாலை வருகை தந்தார். அவருக்கு மாவட்ட எல்லையான ஓங்கூரில் திமுகவினர், பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். திண்டிவனம் ரவுண்டானாவுக்கு வந்ததும் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், காரில் இருந்து கீழே இறங்கி கையசைத்த வாறும், வணக்கம் தெரிவித்தபடியும் நடந்தார். அப்போது சாலையின் இருபுறமும் நின்ற மக்களிடம் குறைகளை கேட்டார். மேலும் பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களையும் பெற்றார்.

இந்தநிலையில், 2ம் நாள்கள ஆய்வில் விழுப்புரம் வழுதரெட்டியில் ரூ.4 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள மறைந்த முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமியின் நினைவு அரங்கம் மற்றும் இடஒதுக்கீட்டு போராட்டத்தில் போலீசார் நடத்திய துப்பாக்கி சூட்டில் உயிர்நீத்த 21 சமூகநீதி போராளிகளின் தியாகத்தை போற்றும் வகையில் ரூ.5 கோடியே 70 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள மணிமண்டபம் ஆகியவற்றை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.



தொடர்ந்து ஏ.கோவிந்தசாமியின் வெண்கல சிலைக்கு முதல்அமைச்சர் மலர்தூவி மரியாதை செலுத்தினார். பின்னர் நினைவு அரங்கம், மணிமண்டபத்தை பார்வையிட்டார். இவ்விழாவில் அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

பின்னர் அதன் அருகில் நடைபெறும் விழாவில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று, பல்வேறு துறைகள் சார்பாக ஏழை, எளிய மக்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றுகிறார். இவ்விழாவை முடித்துக்கொண்டு இன்று மதியமே அவர், சென்னைக்கு புறப்பட்டுச் செல்கிறார்.

## தென் கொரிய விமான நிலையத்தில் திடீரென தீப்பிடித்த விமானம்.. பயணிகள் வெளியேற்றம்

சியோல், ஜன.30

தென் கொரியாவின் பூசன் நகரில் உள்ள கிம்ஹே சர்வதேச விமான நிலையத்தில் இருந்து ஹாங்காங் நோக்கி இன்று பயணிகள் விமானம் புறப்பட தயாராக இருந்தது. அதில் பயணம் செய்யும் பயணிகள் 169 பேர், விமான பணியாளர்கள் 7 பேர் என அனைவரும் விமானத்தில் ஏறினர்.

விமானம் புறப்பட தயாரானபோது விமானத்தின் ஒரு பகுதியில் திடீரென தீப்பற்றியது. பின்னர் மளமளவென விமானத்தின் மற்ற பகுதிகளுக்கும் தீ பரவியது. இதனால் பயணிகள் பீதி அடைந்தனர். பயணிகள் மற்றும் விமான ஊழியர்கள் என அனைவரும் அவசரகால எஸ்கேப் ஸ்லைடு (ஊதப்பட்ட ஸ்டைடு) மூலமாக பத்திரமாக வெளியேற்றப்பட்டனர். எனினும் மூன்று பேருக்கு லேசான காயம் ஏற்பட்டது. விபத்துக்கான காரணம் தொடர்பாக அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கடந்த மாதம் 29ம் தேதி முவான் விமான நிலையத்தில் பயணிகள் விமானம் தரையிறங்கியபோது லேண்டிங் கியர் வேலை செய்யாததால் விமானம் கான் கிரீட் அமைப்பில் மோதி தீப்பிடித்தது. இந்த விபத்தில் 179 பேர் உயிரிழந்தனர். 2 பேர் மட்டுமே உயிர்பிழைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியஅமெரிக்க நாடுகளின் கூட்டு தயாரிப்பு நான் சத்யா நாதெல்லா பேச்சு



நியூயார்க், ஜன.30

அமெரிக்காவின் சியாட்டிலில் உள்ள இந்திய துணை தூதரகம் சார்பில் இந்தியாவின் 76வது குடியரசு தின விழா, பெல் ஹார்பர் மாநாட்டு மையத்தில் நடைபெற்றது. இதில் வாஷிங்டன் மாகாண கவர்னர் பாப் பெர்குசன், மைக்ரோசாப்ட் தலைமை நிர்வாக அதிகாரி சத்யா நாதெல்லா ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் சத்யா நாதெல்லா பேசுகையில், இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே நிலவும் பிணைப்பின் தயாரிப்பு நான். கல்வி விளைவுகள், சுகாதாரம், பொது சேவை செயல்திறன், போட்டித்தன்மை மற்றும் சிறு வணிகங்களின் உற்பத்தித்திறன் ஆகியவற்றைப் பயன்படுத்த தொழில்நுட்பத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பதில் இரு நாட்டு தலைவர்களும் அதிக கவனம் செலுத்துகிறார்கள் என்றார். வாஷிங்டன் மாகாணா கவர்னர் பெர்குசன், இந்திய சமூகம் இந்தியாவிற்கு மட்டுமல்ல, முழு உலகிற்கும் பங்களிப்பை செய்துள்ளது என்றார்.

நிகழ்ச்சியில் இந்தியாவின் ஒவ்வொரு மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசத்தில் இருந்தும் ஒரு தனித்துவமான கலாசார பாரம்பரிய தயாரிப்புகள் காட்சிக்கு வைக்கப்பட்டு இருந்தன. பாரம்பரிய நடன நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## ஆப்பிரிக்க நாட்டில் சிறையில் இருந்து 6 ஆயிரம் கைதிகள் தப்பி ஓட்டம்



கின்சாசா, ஜன.30

கிழக்கு ஆப்பிரிக்க நாடான காங்கோ ஜனநாயக குடியரசில் பொதுமக்களை குறிவைத்து எம்23 என்ற கிளர்ச்சி குழு அடிக்கடி தாக்குதல் நடத்துகிறது. எனவே அவர்களை கட்டுப்படுத்த அரசாங்கம் கடுமையாக போராடி வருகிறது. இதற்கிடையே கடந்த வாரம் கோமா நகரில் ஊடுருவிய கிளர்ச்சியாளர்கள் அங்கு சரமாரி தாக்குதல் நடத்தினர். இதில் ஐ.நா.வின் அமைதிப்படை வீரர்கள் உள்பட 13 பேர் பலியாகினர்.

இதன் தொடர்ச்சியாக முன்செஸ்க் நகரில் உள்ள சிறைச்சாலை பகுதியிலும் கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தினர். அப்போது சிறை காவலர்களுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே மோதல் நடைபெற்றது. இதனை வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டு அங்கிருந்த கைதிகள் அனைவரும் தப்பி ஓட்டம் பிடித்தனர். இதில் சுமார் 6 ஆயிரம் கைதிகள் அங்கிருந்து தப்பி ஓடியதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. இதனால் அங்கு பதற்றமான சூழல் நிலவுகிறது.

## அணு ஆயுத உற்பத்தி மையத்தை ஆய்வு செய்த வடகொரிய அதிபர்



பியோங்யாங், ஜன.30

வடகொரியா கண்டம் விட்டு கண்டம் தாண்டும் அணு ஆயுதங்களை தாங்கி செல்லும் ஏவுகணைகளை சோதனை செய்து உலக நாடுகளுக்கு அவ்வப்போது அதிர்ச்சி கொடுத்து வருகிறது. மேலும், தங்கள் வசம் உள்ள அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நடவடிக்கையிலும் வடகொரியா ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில், வடகொரியாவில் உள்ள அணு ஆயுத உற்பத்தி மையத்தை அந்நாட்டு அதிபர் கிம் ஜாங் உன் நேற்று ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது அணு ஆயுத உற்பத்திக்கு தேவையான யுரேனியம் செறிவூட்டலை மேலும் அதிகரிக்க அதிகாரிகளுக்கு அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

## முன்னாள் மாணவர்களின் முயற்சியால் அழகானது அரசு பள்ளி

செங்கல்பட்டு, ஜன. 30

செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றம் வட்டம் சதுரங்கப்பட்டினம் கிராமத்தில் அரசு மேல் நிலைப்பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளியில் சுமார் 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர்...

பள்ளி மேலாண்மை குழுவின் முயற்சியால் பல்வேறு நலத்திட்டங்களை பள்ளிக்குச் செய்து வருகின்றனர்...

அதன் அடிப்படையில் முன்னாள் மாணவர்களை ஒருங்கிணைத்து அவர்களிடம் பள்ளியின் தேவை குறித்து கோரிக்கை வைக்கப்பட்டது... அக்கோரிக்கையின் அடிப்படையில் 199596 முன்னாள் மாணவர்கள் முயற்சியால் பள்ளி தலைமை ஆசிரியர் அனுமதியுடன் சதுரங்கப்பட்டினம் அரசு மேல்நிலைப்பள்ளி வளாக முன்புற சுவற்றில் தேசத் தலைவர்களின் வரைபடமும் திருக்குறளும் எழுதப்பட்டது....




தேசத் தலைவர்களின் வரைபடத்தாலும் திருக்குறளாலும் அழகாக தோற்றமளிக்கிறது சதுரங்கப் பட்டினம் அரசு பள்ளி...

முன்னாள் மாணவர்கள் ஒன்றிணைந்து பள்ளியின் தேவையை பூர்த்தி செய்தது பொதுமக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது....

## மக்காச்சோள செஸ் வரி நீக்க தமிழ்நாடு அரசுக்கு கோரிக்கை

சென்னை, ஜன.30

மக்காச்சோளத்திற்கு புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள செஸ் வரி விதிப்பை திரும்பப்பெற்று, அதனை விளைவிக்கும் விவசாயிகளுக்கு தமிழ்நாடு அரசு ஆதரவு வழங்கிட வேண்டும் என்ற எனது கோரிக்கையை, சாரண சாரணியர் இயக்க சர்வதேச நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பிக்க திருச்சி வந்திருந்த மாண்புமிகு துணை முதல்வர்,

ஆருயிர் சகோதரர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் நேரில் வழங்கி, கோரிக்கையின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தேன். இந்த கோரிக்கையை மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அண்ணன் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், வேளாண்துறை அமைச்சருக்கும் அஞ்சலில் அனுப்பியுள்ளேன் என்ற தகவலையும் துணை முதல்வரிடம் தெரிவித்தேன். விவசாயப் பெருங்குடி மக்களுக்கான எனது

இந்த கோரிக்கையின் நியாயத்தை புரிந்துகொண்டு அதனை விரைந்து நிறைவேற்றித் தர உதவிடுமாறு துணை முதல்வரை கேட்டுக் கொண்டேன்.



## ஸ்ரீபெரும்புதூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வாகன ஓட்டுனர்களுக்கு கண் பரிசோதனை முகாம்



காஞ்சிபுரம், ஜன.30

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில், தேசிய சாலை பாதுகாப்பு மாதத்தை முன்னிட்டு வாகன ஓட்டுனர்களுக்கான கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது. வட்டார போக்குவரத்து அலுவலர் குமரா, மோட்டார் வாகன ஆய்வாளர் கிருஷ்ணா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இம் முகாமில் டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை மருத்துவர்கள் மூலம், நூற்றுக்கும் மேற்பட்ட வாகன ஓட்டுனர்களுக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டது,

இதில் பார்வை குறைபாடு உள்ளவர்கள் கண்டறியப்பட்டு, மேல் சிகிச்சைக்கு மருத்துவர்களால் பரிந்துரைக்கப் பட்டது. இதில் வட்டார போக்குவரத்து அதிகாரிகள், தனியார் மருத்துவமனை ஊழியர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## தொடுகாடு பள்ளியில் குடியரசுத் திருநாள் கொண்டாட்டம் - தேசிய கொடி, இனிப்பு வழங்கி கொண்டாடினார்கள்

தொடுகாடு, ஜன.30

தொடுகாடு பள்ளியில் குடியரசுத் திருநாள் கொண்டாட்டம்–தேசிய கொடி, இனிப்பு வழங்கி கொண்டாடினார்கள். குடியரசு திருநாளை முன்னிட்டு நட்சத்திர போராளிகளின் அறக்கட்டளை மற்றும் பனிமலர் மருத்துவர்கள் இணைந்து திருவள்ளூர் மாவட்டம் தொடுகாடு ஊராட்சி அரசு நடுநிலைப்பள்ளியில் தேசியக் கொடியை ஏற்றி இனிப்புகள் & காலை உணவு வழங்கினர். பொதுமக்களுக்கு தேசியக் கொடி வழங்கப்பட்டு, ஆசிரியர்களுக்கு சால்வை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வை ஒருங்கிணைத்தவர்: ரகுநாதன் ஆதரவாளர்கள்: தொடுகாடு ஊரா ட்சி அரசு துவக்கப்பள்ளி ஆசிரியர்கள், பனிமலர் மருத்துவமனை மருத்துவர்கள். பொதுமக்கள் பங்கேற்று நிகழ்ச்சி யை சிறப்பித்தனர்.



## ஈ.சி.ஆர். வீடியோ... தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவுகிறது: அண்ணாமலை

சென்னை, ஜன.30

சென்னை ஈசிஆர் சாலையில் முட்டுக்காடு பகுதியில் நள்ளிரவு நடுரோட்டில் காரை நிறுத்திய இளைஞர்கள் மற்றொரு காரில் வந்த பெண்களை துரத்திய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருந்தது. இது தொடர்பாக சமூகவலைதளத்தில் வீடியோ ஒன்று வைரலாகி வருகிறது. இந்த சம்பவம் தொடர்பான வீடியோ தற்போது சமூக வலைதளத்தில் வைரலாகி வரும் நிலையில் வீடியோவின் உண்மைத் தன்மை குறித்தும், இளம்பெண்களை காரில் துரத்தியது யார்? என்பது குறித்தும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், இதுகுறித்து தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை இன்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது,

ஈ.சி.ஆர் பகுதியில் நடந்த சம்பவம் நெஞ்சை பதறவைக்கிறது. தி.மு.க கட்சி கொடி கட்டிய காரில் சென்று பெண்ணிடம் மோசமாக நடந்துள்ளனர். தி.மு.க. கொடி கட்டிய காரில் வந்து செய்த செயலை பார்க்கும்போது தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பு என்பது கேள்விக் குறியாகவே உள்ளது என்பதற்கு இந்த சம்பவமும் ஓர் உதாரணம்.

இந்தியாவுக்கு முழு சுதந்திரம் கிடைத்துள்ளது. ஆனால் தமிழ்நாட்டுக்கு முழு சுதந்திரம் இன்னும் கிடைக்கவில்லை.

இரவு, பகல் என எந்த நேரத்திலும் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. எனவே மாநில அரசு காவல் துறைக்கு பேட்ரோல் வாகனங்களை வாங்கிக் கொடுத்து ரோந்து போகச் சொல்ல வேண்டும். கையாலாகாத தி.மு.க. அரசு பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுப்பதற்கு ஒரு துரும்பைக் கூட கிள்ளிப் போடவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

# போச்சம்பள்ளி அருகே வீடுகள் முன்பு கருப்பு கொடிகட்டி கிராம மக்கள் போராட்டம்



போச்சம்பள்ளி, ஜன.30

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அடுத்த பாளேத்தோட்டம் ஊராட்சி சவுளுகொட்டாய், பூசாரி கொட்டாய், சின்ன பாளேத்தோட்டம் மற்றும் மொளுகனூர் உள்ளிட்ட கிராம மக்கள் சுமார் 50 ஆண்டுகளுக்கும் மேலாக தார்சாலையை பயன்படுத்தி வந்தனர்.

இந்த தார் சாலையானது தற்பொழுது வருவாய் துறை அதிகாரிகள் இந்த பாதையானது நீர் வழிப்பாதையெனவும் இந்த தார் சாலையை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் இந்த கிராமங்களில் சுமார் 300க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வரும் நிலையில் கிராமங்களுக்கு செல்ல வேறுமாற்று பாதை இல்லாத நிலையில் தற்பொழுது கிராம மக்களுக்கு மாற்றுப்பாதை ஏற்பாடு செய்யாமல் வருவாய்த் துறை அதிகாரிகள் தார் சாலையை தூர்வாரி கால்வாய் அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஊரின் முகப்பு வரை கால்வாய் தூர்வாரும் பணியானது முடிவுற்ற நிலையில் தற்போது கிராம மக்கள் பயன்படுத்தி வந்த தார் சாலையில் தூர்வார அதிகாரிகள் நிலம் அளவீடு செய்யப்பட்டு எல்லை கற்கள் நடப்பட்டது.

கிராம மக்கள் மாற்று பாதை அமைத்து தந்த பின்னரே கால்வாயினை தூர்வார வேண்டும் என நூதன முறையில் வீடுகளின் முன்பும், தெருக்களின் முன்பும் கருப்பு கொடியினை கட்டி தற்பொழுது கோஷங்களை எழுப்பி நூதன முறையில் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

வீடுகளில் முன்பு கருப்பு கொடிகளை கட்டி பாதை கேட்டு போராட்டம் நடத்தி வரும் சம்பவம் இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இதுகுறித்து தகவல் அறிந்து வந்த போச்சம்பள்ளி போலீஸ் இன்ஸ்பெக்டர் நாகலட்சுமி கிராம மக்களிடையே பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதில் விரைந்து பாதைக்கான முடிவுகள் எடுக்கப்படும் என்று உறுதி அளித்ததின் பெயரில் கிராம மக்கள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.

# இளைஞர் உயிரோடு எரித்து கொலை செய்யப்பட்ட வழக்கு: 5 பேர் மீது குண்டர் சட்டத்தில் நடவடிக்கை

காவேரிப்பாக்கம், ஜன.30

ராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி அடுத்த நெல்வாய் கிராமத்தை சேர்ந்தவர்கள் தமிழரசன். விஜயகணபதி. இவர்கள் இருவரும் கடந்தசில நாட்களுக்கு முன்பு திருமால்பூர் அரசு மேல்நிலைப்பள்ளி அருகே நின்று கொண்டிருந்தனர். அப்போது மோட்டார்சைக்கிளில் வந்த திருமால்பூர் பகுதியை சேர்ந்த பிரேம்குமார் என்பவர், அவர்களை ஓரமாக நிற்குமாறு கூறியுள்ளார். இதில் அவர்களுக்குள் வாய்த்தகராறு ஏற்பட்டுள்ளது.

அடுத்தநாள் சூர்யா, விஜயகணபதி ஆகிய இருவரும் அரசு மேல்நிலைப் பள்ளி அருகே வந்துள்ளனர். அப்போது அங்கிருந்த பிரேம்குமார் தனது நண்பர்களுடன் சேர்ந்து மீண்டும் சூர்யாவிடம் தகராறில் ஈடுபட்டுள்ளார். இதில் இரு தரப்பினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டுள்ளனர்.

ஆவேசமடைந்த பிரேம்குமார் அந்த வழியாக வாகனத்திற்கு பெட்ரோல் வாங்கி சென்ற நபரை மடக்கி அவரிடமிருந்த பெட்ரோல் கேனை பிடுங்கி இருவர் மீதும் ஊற்றி தீ வைத்துவிட்டு நண்பர்களுடன் தப்பி சென்றுள்ளார். இதில் படுகாயமடைந்த இருவரையும் அங்கிருந்தவர்கள் மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் காஞ்சீபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

பின்னர் சென்னையில் உள்ள அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்று வந்தனர். இந்த நிலையில் தீவிர சிகிச்சை பெற்று வந்த நிலையில் தமிழரசன் சிகிச்சை பலனின்றி கடந்த 22ம் தேதி உயிரிழந்தார். விஜயகணபதிக்கு தொடர்ந்து சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது. இந்த சம்பவம் தொடர்பாக ஏற்கனவே பிரேம் குமாரை போலீசார் கைது செய்தனர். மேலும் வெங்கடேசன் (23), திருமால்பூரை சேர்ந்த மணிகண்டன் (23), நவீன் (21), கீழ்வெண்பாக்கம் பகுதியை சேர்ந்த சதீஷ்குமார் (23) உள்ளிட்டோரை கடந்த 20ந் தேதி கைது செய்து சோளிங்கர் கோர்ட்டில் ஆஜர்படுத்தி, வேலூர் மத்திய சிறையில் அடைத்தனர். இந்நிலையில் இளைஞர் உயிரோடு எரித்து கொலை செய்யப்பட்ட வழக்கில் 5 பேர் மீது குண்டர் சட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி பிரேம்குமார், வெங்கடேசன், சதீஷ்குமார், மணிகண்டன், நவீன் ஆகியோர் மீது குண்டர் சட்டத்தில் நடவடிக்கை எடுக்க மாவட்ட கலெக்டர் உத்தரவு பிறப்பித்துள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கு கோர்ட்டு அதிரடி தீர்ப்பு

திருவாரூர், ஜன.30

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அருகே உள்ள தலையாமங்கலம் பகுதியை சேர்ந்தவர் சதாசிவம்(வயது 65). இவர் கடந்த 2019ம் ஆண்டு 12 வயது சிறுமி ஒருவரிடம் ஆசை வார்த்தைகளை கூறி அவரை பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். இதனால் பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோர் தலையாமங்கலம் போலீசில் புகார் கொடுத்தனர். அதன்பேரில் போலீசார் 'போக்சோ' வழக்குப் பதிவு செய்து சதாசிவத்தை கைது செய்து சிறையில் அடைத்தனர். பின்னர் அவர் ஜாமீனில் வெளிவந்தார்.

இந்த வழக்கின் விசாரணை நடந்து வந்த நிலையில் சதாசிவம் கோர்ட்டில் ஆஜராகவில்லை. இதனால் அவர் மீது பிடிவாரண்டு பிறப்பித்து கோர்ட்டு உத்தரவிட்டது. அதன்படி போலீசார் அவரை கைது செய்து கோர்ட்டில் ஆஜர்படுத்தி நாகையில் உள்ள சிறையில் அடைத்தனர். வழக்கின் இறுதி கட்ட விசாரணைக்காக அவரை போலீசார் திருவாரூர் மகிளா கோர்ட்டில் ஆஜர் படுத்தி வந்தனர்.

இந்த வழக்கில் திருவாரூர் மகிளா கோர்ட்டு நீதிபதி சரத்ராஜ் நேற்று தீர்ப்பு கூறினார். அவர் தனது தீர்ப்பில், சதாசிவத்துக்கு 103 ஆண்டுகள் சிறை தண்டனையும், ரூ.19 ஆயிரம் அபராதமும் விதித்து உத்தரவிட்டார். சிறை தண்டனையை அவர் ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு உதவி தொகையாக ரூ.7 லட்சம் அரசு வழங்க வேண்டும் என்றும் நீதிபதி தீர்ப்பளித்தார்.

# கச்சத்தீவு அந்தோணியார் ஆலய திருவிழா மார்ச் 14, 15ந் தேதிகளில் நடக்கிறது



ராமேசுவரம், ஜன.30

இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடைப்பட்ட நடுக்கடல் பகுதியில் கச்சத்தீவு உள்ளது.

ராமேசுவரம் பகுதியில் இருந்து 12 கடல் மைல் தொலைவிலும், இலங்கை நெடுந்தீவு பகுதியில் இருந்து 18 கடல் மைல் தொலைவிலும் அமைந்துள்ளது. இந்த கச்சத்தீவில் புனித அந்தோணியார் ஆலயம் உள்ளது. இந்த ஆலய திருவிழா பிப்ரவரி அல்லது மார்ச் மாதங்களில் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் இலங்கையில் யாழ்ப்பாணம் மறை மாவட்ட பிஷப் ஜோசப்தாஸ் ஜெபரத்தினம் இமெயில் மூலம் கடிதம் ஒன்றை அனுப்பி உள்ளார். இந்த கடிதமானது, சிவகங்கை மதுரை மாவட்ட பிஷப் லூர்து ஆனந்தம் மற்றும் ராமேசுவரம் வேர்க்கோடு பங்குத் தந்தை ஆகியோருக்கு வந்துள்ளது.

அந்த கடிதத்தில் இந்த ஆண்டு கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலய திருவிழா வருகிற மார்ச் 14 மற்றும் 15 ஆகிய 2 நாட்கள் நடைபெறுவதாகவும் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும், இந்தியாவில் இருந்தும் பக்தர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

மார்ச் 14ந்தேதி மாலை ஆலயத்தின் முன்புள்ள கொடிமரத்தில் கொடியேற்றத்துடன் திருவிழா தொடங்குகிறது. தொடர்ந்து ஆலயத்தை சுற்றி சிலுவை பாதை திருப்பலியும், அன்று இரவு திருவிழா திருப்பலியும் நடக்கிறது. இரவு 9 மணி அளவில் அந்தோணியார் தேர் பவனி நடைபெறுகிறது.

மறுநாள் (மார்ச் 15 ந்தேதி) காலை 7 மணி அளவில் திருவிழா திருப்பலி தொடங்குகிறது. சுமார் 2 மணி நேரத்திற்கு மேலாக நடைபெறும் இந்த பிரார்த்தனையில் இந்தியா, இலங்கையைச் சேர்ந்தவர்களும், இருநாட்டு பங்குத் தந்தைகளும் கலந்து கொள்வார்கள்.

இதுகுறித்து நெடுந்தீவு பங்குத்தந்தை அசோக் வினோ கூறியதாவது: கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலய திருவிழா குறித்து யாழ்ப்பாணம் மறை மாவட்ட பிஷப் மூலம் அழைப்பிதழ் வந்துள்ளது. இந்த அழைப்பிதழை ராமநாதபுரம் மாவட்ட கலெக்டரை நேரில் சந்தித்து கொடுத்து கச்சத்தீவு ஆலய திருவிழாவிற்கு மக்கள் வருவதற்கு அனுமதி வழங்கி, அதற்கான ஏற்பாடுகள் செய்து தர வேண்டும் என கேட்க உள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

கடந்தஆண்டுஇலங்கை அரசு, இலங்கை கடற்படையை கண்டித்து மீனவர்கள் போராட்டம் நடத்தி வந்ததால் கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலய திருவிழாவை புறக்கணித்து, தமிழகத்தில் இருந்து மீனவர்கள் உள்பட யாரும் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கோவையில் திடீரென ஐ.டி நிறுவனம் மூடல்:3,000 பேரின் வாழ்வாதாரம் காக்க வேல்முருகன் வலியுறுத்தல்

சென்னை, ஜன.30

கோவையில் திடீரென மூடப்பட்ட ஐ.டி நிறுவனத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும், அந்நிறுவனத்தால் வாழ்வாதாரத்தை இழந்து நிற்கும் 3,000க்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு கிடைக்க வழிவகுக்கவும் வேண்டும் என்று தமிழக அரசுக்கு தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் தி.வேல்முருகன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் இன்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது;

"போக்கஸ் எஜூமேட்டிக் பிரைவேட் என்ற தொழில்நுட்ப நிறுவனம், கடந்த 2017ஆம் ஆண்டு முதல், கோவை ஆர்.எஸ்.புரம் தடாகம் சாலையில் செயல்பட்டு வந்தது. இந்நிறுவனத்தில், தமிழகத்தைச் சேர்ந்த 3,000க்கும் மேற்பட்ட இளைஞர்கள் பணியாற்றி வந்தனர். இப்பணியாளர்கள், அமெரிக்காவில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு இணைய வாயிலாக பாடம் கற்பித்து வந்துள்ளனர்.

இந்நிலையில், ஒரு நாளுக்கு முன்னதாக மின்னஞ்சல் மூலமாக, யாருக்கும் பணிக்கு வர வேண்டாம் என்று தகவல் அளித்து விட்டு, அந்நிறுவனத்தை இழுத்து மூடியிருக்கிறது நிர்வாகம். குறிப்பாக, ஜனவரி 26ஆம் தேதி வரை பணியாற்றியதற்கான ஊதியம் கூட வழங்கப்படவில்லை. இதனால், தங்களின் வாழ்வாதாரத்தை இழந்துள்ள 3,000க்கும் மேற்பட்ட இளைஞர்கள், கோவை மாவட்ட ஆட்சியரை நாடி மனு அளித்திருக்கின்றனர்.

இதன் மூலம், முடிந்த அளவுக்கு உழைப்புச் சுரண்டலை மேற்கொண்டதோடு, கடைசியில் நிறுவனத்தை மொத்தமாக இழுத்து மூடிவிட்டு தொழிலாளர்களை நட்டாற்றில் விட்டிருக்கிறது நிர்வாகம். தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டி கொழுத்துவிட்டு பின்னர், நிறுவனத்தை இழுத்து மூடிவிட்டு நிரந்தர மற்றும் இதர தொழிலாளர்களையும் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளியது.

எனவே, தொழிலாளர்களைச் சுரண்டி லாபம் பார்த்து அதனைச் சுருட்டிக்கொண்டு ஓடிய நிறுவனத்தின் மீது உரிய நடவடிக்கை எடுப்பதோடு, வாழ்வாதாரத்தை இழந்து நிற்கும் 3,000க்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு கிடைக்க, தமிழக அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக வாழ்வுரிமைக் கட்சி கோரிக்கை விடுக்கிறது"

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# துணை முதலமைச்சர் உதவியால் பாதுகாப்பாக தமிழகம் திரும்பினோம் கபடி பயிற்சியாளர்



சென்னை, ஜன.30

2024,25ம் ஆண்டுக்கான பல்கலைக்கழக அளவிலான பெண்கள் கபடி போட்டி பஞ்சாப் மாநிலம் பட்டிண்டா மாவட்டத்தில் கடந்த 24 ந்தேதி நடைபெற்றது.

தமிழகத்தில் இருந்து அன்னை தெரசா, பெரியார் மற்றும் அழகப்பா பல்கலைக்கழகங்களில் இருந்து 36 வீராங்கனைகள் சென்றிருந்தனர். அவர்களுடன், 3 மேலாளர்கள், 3 பயிற்றுநர்கள் சென்றனர். அன்னை தெரசா பல்கலைக்கழகத்திற்கும், தர்பங்கா பல்கலைக்கழகத்திற்கும் இடையே போட்டி நடைபெற்றது.

தமிழ்நாடு பீகார் இடையிலான போட்டியில் போட்டியின்போது, வெற்றி புள்ளிகள் தொடர்பாக சிறிய மன கசப்பும், அதனை தொடர்ந்து சிறு வாக்குவாதமும் ஏற்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு வீராங்கனையின் மீது தாக்குதல் நடந்ததாக வந்த புகாரின் அடிப்படையில், பயிற்சியாளர் பாண்டியராஜனை போலீசார் விசாரணைக்காக அழைத்து சென்றனர். இந்த விவகாரம் தெரியவந்தவுடன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் உடனடியாக அங்குள்ள மாவட்ட கலெக்டர், போலீஸ் சூப்பிரண்டு ஆகியோரிடம் பேசி, தமிழக மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க உத்தரவிட்டார்.

இந்த விவகாரம் தொடர்பான வீடியோ சமூகவலைதளங்களில் வைரலான நிலையில் தமிழக வீராங்கனைகள் பாதுகாப்பாக உள்ளதாக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார். இந்நிலையில் பஞ்சாபிற்கு கபடி போட்டியில் விளையாட சென்றதமிழகவீராங்கனைகள் தமிழகம் திரும்பினர்.

கபடி பயிற்சியாளர் செய்தியாளர்களிடம் கூறுகையில், துணை முதலமைச்சர் உதவியால் பஞ்சாபில் இருந்து பாதுகாப்பாக தமிழகம் திரும்பி உள்ளோம். தாக்குதல் நடத்தப்பட்டபோது பாதுகாப்பற்ற சூழலில் இருந்தோம். உடனடியாக துணை முதலமைச்சர் தொடர்பு கொண்டார்.

போட்டியின்போது அருகில் டிஎஸ்பி அமர்ந்திருந்தார். துணை முதல்வர் பேசிய உடன் அவர் எங்களை நடத்தும் தன்மையே மாறியது.

நமது அணி வீராங்கனையை எதிரணியினர் தாக்க முயற்சித்தபோது தற்காப்புக்காக தமிழக வீராங்கனைகள் தாக்கினர். துணை முதலமைச்சர், அமைச்சர்கள் என தமிழக அரசின் சிறப்பான செயல்பாட்டால் பத்திரமாக காக்கப்பட்டோம்.

உடனடியாக டெல்லி அழைத்து வந்து தமிழ்நாடு இல்லத்தில் தங்க வைத்து தற்போது சென்னை அழைத்து வரப்பட்டுள்ளோம் என்று கூறினார்.

தமிழக கபடி பயிற்சியாளரை தனியாக அழைத்து சென்றும் தாக்கியதாக வீராங்கனைகள் குற்றம் சாட்டினர்.

# சோஹோ சி.இ.ஓ. பொறுப்பில் இருந்து விலகிய ஸ்ரீதர் வேம்பு...காரணம் என்ன?



சென்னை, ஜன.30

சோஹோ நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி (சி.இ.ஓ.) பொறுப்பில் இருந்து ஸ்ரீதர் வேம்பு விலகியுள்ளார். செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் அதிக கவனம் செலுத்த உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் தளப்பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"இன்று முதல் புதிய அத்தியாயம் தொடங்குகிறது. செயற்கை நுண்ணறிவு துறையில் ஏற்பட்டுள்ள அண்மைக்கால மேம்பாடுகள் உள்ளிட்ட நம்மை எதிர்நோக்கியுள்ள பல்வேறு சவால்கள் மற்றும் வாய்ப்புகளை கருத்தில் கொண்டு இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஆய்வு மற்றும் மேம்பாட்டு பணிகள், என்னுடைய தனிப்பட்ட கிராமப்புற வளர்ச்சி ஆகியவற்றில் கவனம் செலுத்த இது ஏற்றதாக இருக்கும்.

சோஹோ நிறுவனத்தின் சி.இ.ஓ. பொறுப்பில் இருந்து விலகி, ஆய்வுகளில் கவனம் செலுத்த முதன்மை விஞ்ஞானி என்ற புதிய பொறுப்பை ஏற்கிறேன். இணை நிறுவனர் சைலேஷ் குமார் தேவே நமது குழுமத்தின் புதிய சி.இ.ஓ.வாக பதவியேற்கிறார். மற்றொரு இணை நிறுவனரான டோனி தாமஸ் சோஹோ நிறுவனத்தின் அமெரிக்க செயல்பாடுகளை கவனித்துக் கொள்வார். ராஜேஷ் கணேசன் மற்றும் மணி வேம்பு ஆகியோர் சோஹோ.காம் பிரிவுக்கான பொறுப்பை கவனித்துக் கொள்வார்கள்.

ஆய்வு மற்றும் மேம்பாடு சவால்களை எப்படி எதிர்கொள்கிறோம் என்பதைப் பொருத்தே நம்முடைய நிறுனத்தின் எதிர்காலம் இருக்கிறது. எனவே, புதிய பொறுப்பை ஆற்றலோடும், உற்சாகத்தோடும் எதிர்நோக்கியுள்ளேன். தொழில்நுட்பப் பணிகளுக்கு மீண்டும் திரும்புவது மகிழ்ச்சியளிக்கிறது" என பதிவிட்டுள்ளார்.

# வெள்ளியங்கிரி மலையேற பக்தர்களுக்கு அனுமதி



கோவை, ஜன.30

கோவையை அடுத்த மேற்குத் தொடர்ச்சி மலை பூண்டியில் வெள்ளியங்கிரி ஆண்டவர் கோவில் உள்ளது. இது தென்கைலாயம் என்று பக்தர்களால் போற்றப்பட்டு வருகிறது. இந்த கோவில் அடிவாரத்தில் இருந்து செங்குத்தாக உள்ள 7 மலைகள் ஏறி, சுயம்பு வடிவில் காட்சி தரும் சிவனைத் தரிசிக்க ஆண்டுதோறும் பக்தர்கள் மலை ஏறிச் செல்வது வழக்கம்.

வெள்ளியங்கிரி மலையேற பக்தர்களுக்கு ஆண்டுதோறும் பிப்ரவரி முதல் வாரத்தில் இருந்து, மே மாதம் இறுதி வாரம் வரைக்கும் வனத்துறையினர் அனுமதி அளிப்பார்கள். இதில், மகா சிவராத்திரி மற்றும் சித்ரா பவுர்ணமி நாட்களில் தமிழ்நாடு மட்டுமின்றி வெளிமாநிலங்களில் இருந்தும் பக்தர்கள் அதிக எண்ணிக்கையில் வந்து 7 மலை ஏறி சாமி தரிசனம் செய்வார்கள்.

இந்த ஆண்டுக்கான மகா சிவராத்திரி அடுத்த மாதம் (பிப்ரவரி) 26ந் தேதி வருகிறது. இதையொட்டி வெள்ளியங்கிரி மலையேறி பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய வனத்துறை அனுமதி அளித்து உள்ளது. அதில், பக்தர்கள் வருகிற 1ந் தேதி முதல் மே மாதம் இறுதி வரை வெள்ளியங்கிரி மலை ஏறலாம் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

மலை ஏறும் பக்தர்கள், பிளாஸ்டிக், எளிதில் தீப்பிடிக்கும் பொருட்கள் உள்ளிட்டவற்றை கொண்டு செல்ல அனுமதி இல்லை. எனவே அது போன்ற பொருட்களை கொண்டு வருவதை பக்தர்கள் தவிர்க்க வேண்டும். மலையில் சுற்றுச்சூழலை பாதுகாக்க ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று வனத்துறையினர் வேண்டுகோள் வைத்து உள்ளனர். கோவில் மற்றும் மலையேறும் பக்தர்களின் கூட்டம் அதிகமாக இருக்கும் என்பதால், கோவில் நிர்வாகம், வனத்துறை மற்றும் போலீசார் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

# கலைஞர் கனவு இல்லம் திட்டத்திற்கு மேலும் ரூ.500 கோடி நிதி ஒதுக்கீடு

சென்னை, ஜன.30

கலைஞரின் கனவு இல்லம் திட்டத்திற்கு இதுவரை ரூ2,125 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், தற்போது 1 லட்சம் வீடுகள் கட்டப்பட்டு வருவதாகவும் அரசு விளக்கம் அளித்துள்ளது. இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் கிராமப்புற பகுதிகளில் ஏறத்தாழ 8 லட்சம் குடிசை வீடுகள் உள்ளதாக "அனைவருக்கும் வீடு" என்ற கணக்கெடுப்பின் வழியாக கண்டறியப்பட்டதன் அடிப்படையில் "குடிசையில்லா தமிழ்நாடு" என்ற இலக்கினை அடையும் பொருட்டு, எதிர்வரும் 2030ஆம் ஆண்டிற்குள் ஊரக பகுதிகளில் 6 வருடங்களில் 8 இலட்சம் வீடுகள் புதியதாக கட்டித்தர அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதன்படி நடப்பு நிதியாண்டில் (202425) ஒரு லட்சம் வீடுகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீட்டின் பரப்பளவு, சமையலறை உட்பட, 360 சதுர அடியாகும். பயனாளிகளின் நிதிச்சுமையை குறைக்கும் பொருட்டு இத்திட்டத்தின் கீழ் TANCEM சிமெண்ட் மற்றும் இரும்பு கம்பிகள் குறைந்த விலையில் கொள்முதல் செய்யப்பட்டு, துறை மூலம் வழங்கப்படுகிறது. வீட்டின் கட்டுமானத்திற்கு ஏற்ப தரைமட்ட நிலை, ஜன்னல் மட்ட நிலை, கூரை வேயப்பட்ட நிலை மற்றும் பணிமுடிவுற்ற பின் என நான்கு தவணைகளில் ஒற்றை ஒருங்கிணைப்பு வங்கி கணக்கின் (Single Nodal AccountSNA) மூலம் தொகை நேரடியாக பயனாளிகளுக்கு விடுவிக்கப்பட்டு வருகிறது. இதுவரை தமிழ்நாடு அரசால் ரூ.1,625.30 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு. பயனாளிகளுக்கு வீட்டி ன் கட்டுமான நிலைக்குஏற்ப ரூ.1,350.99 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

மேலும், துறை மூலம் வழங்கப்படும் சிமெண்ட் மற்றும் இரும்பு கம்பிகளுக்கு (Steel) என ரூ.249.86 கோடி வழங்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் ரூ.1,600.85 கோடி இதுவரை கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கலைஞரின் கனவு இல்லம் திட்டம் மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒரு லட்சம் வீடுகளும் விரைவாக கட்டப்பட்டு வருகிறது. இதனை கருத்தில் கொண்டு, வீடுகளின் கட்டுமான பணிகளை துரிதப்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு அரசு மேலும் ரூ.500 கோடி விடுவித்து ஆணை வழங்கி உள்ளது. தற்போது வரப்பெற்றுள்ள ரூ.500 கோடியும் சேர்த்து மொத்தம் ரூ.2,125.30 கோடி பெறப்பட்டு கட்டுமான நிலைக்கு ஏற்ப பயனாளிகளின் வங்கிகணக்கிற்கு நேரடியாக தொகை விடுவிக்கப்பட்டு வருகிறது.

இந்நிதியாண்டிற்குள் அனைத்து வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டு, மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர தமிழ்நாடு அரசால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மதுரையில் வீட்டுவசதி வாரிய பொருட்கள் ஜப்தி



மதுரை, ஜன.30

மதுரையில் வீட்டு வசதி வாரிய திட்டத்திற்கு 92 சென்ட் நிலத்தை முருக சாமி என்பவரின் குடும் பத்தினர் கொடுத்துள்ள னர். இதற்காக 11 லட்சம் ரூபாய் மட்டுமே கொடுத் துவிட்டு, மீதமுள்ள 30 லட்சம் ரூபாயை 30 ஆண் டுகளாக தரவில்லை என புகார் அளித்திருந்தனர்.

நிலுவைத் தொகையை வ ழ ங் கா த த தா ல் வீட்டுவசதி வாரிய பொருட்களை ஜப்தி செய்ய சார்பு நீதிமன்றம் உத்தரவிட்டது. நீதிமன் றத்தின் உத்தரவுப்படி, மதுரை எஸ்.எஸ். காலனி பகுதியில் உள்ள தமிழ் நாடு வீட்டு வசதி வாரிய அலுவலகத்தில் உள்ள பொருட்கள் ஜப்தி செய் யப்பட்டது.

இது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்ப டுத்தியது.

# ஸ்ரீரங்கத்தில் பிரபல ரவுடி சரமாரியாக வெட்டிக்கொலை: உறவினர்கள் மறியல்



திருச்சி, ஜன.30

திருச்சி ஸ்ரீரங்கம் மேலூர் ரோடு லட்சுமி நகர் பகுதி யில் சேர்ந்தவர் அன்பு (வயது 32). ரவுடி. சரித்திர பதிவேடு குற்றவாளியான இவர் மீது காவல் நிலை யங்களில் சில வழக்குகள் உள்ளன.

மேலும் பிரபல தொழி லதிபர் ராமஜெயம் கொலை வழக்கில் உண்மை கண்டறியும் சோதனைக்கு உட்படுத் தப்பட்ட ரவுடி திலீப்பின் கூட்டாளியாவார்.

இவர் இன்று (செவ் வாய்க் கிழமை) காலை 8.30 மணிக்கு வழக்கம் போல் அங்குள்ள ஜிம் முக்கு சென்று விட்டு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பினார்.

ஸ்ரீரங்கம் தெப்பக்குளம் தெரு சுற்றுலா வாகன பார்க்கிங் பகுதியில் வந்த போது இரு வேறு மோட் டார் சைக்கிளில் வந்த நான்கு பேர் கும்பல் அவரை பயங்கர ஆயுதங்க ளுடன் வழிமறித்தது.

இதனால் அதிர்ச்சி அடைந்த அவர் மோட் டார் சைக்கிளை அங் கேயே போட்டுவிட்டு உயிருக்கு பயந்து ஓடினார். ஆனால் அந்த கும்பல் விடாமல் அவரை துரத்திச் சென்று பார்க்கிங் பகுதி யில் சுற்றி வளைத்து சரமா ரியாக அரிவாளால் வெட் டினர்.

இதில் தலை, கழுத்து, கைகளில் பலத்த காயம டைந்த அவர் ரத்த வெள் ளத்தில் சாய்ந்தார்.

க ண் ணி மை ம க் கு ம் நேரத்தில் நடந்த இந்த சம் பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது ஏற்படுத் தியது.

பின்னர் உயிருக்கு போராடிய அவரை அக்கம் பக்கத்தினர் மீட்டு ஸ்ரீரங் கம் அரசு மருத்துவம னைக்கு கொண்டு சென்ற னர்.

அங்கு டாக்டர்கள் பரி சோதித்து விட்டு அன்பு இறந்து விட்டதாக தெரி வித்தனர். கொலை செய் யப்பட்ட அன்புவுக்கு மனைவி மற்றும் இரண்டு வயதில் ஒரு பெண் குழந்தை உள்ளது. இது பற்றி தகவல் அறிந்த மனைவி மற்றும் உறவி னர்கள் ஸ்ரீரங்கம் அரசு ம ரு த் து வ ம னை யி ல் திரண்டனர்.

மேலும் கொலை நடந்த பகுதி ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலுக்கு சாமி தரிச னம் செய்ய வரும் வெளி மாநில மற்றும் வெளியூர் சுற்றுலாப் பயணிகளின் வாகனநிறுத்தமிடமாகும்.

கொலையாளிகள் அன் புவை சரமாரியாக வெட் டிக் கொலை செய்வதை பார்த்து வெளியூர் பக்தர் கள் அதிர்ச்சியில் உறைந்த னர்.

மேலும் அந்த வழியாக வந்த பள்ளி மாணவ மாண விகளும் நாலா புறமும் சிதறி ஓடினர். சம்பவம் குறித்து ஸ்ரீரங்கம் போலீஸ் இன் ஸ் பெ க் ட ர் கிருபானந்தம் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

இதற்கிடையே கொலை செய்யப்பட்ட அன்புவின் உறவினர்கள் மற்றும் நண் பர்கள் ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனை முன்பு கொலையாளிகளை உட னடியாக கைது செய்ய வலியுறுத்தி சாலை மறி யல் போராட்டத்தில் ஈடு பட்டனர்.

போலீசார் அவர்களை சமரசம் செய்தனர். இந்த போராட்டம் காரணமாக அப்பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப் பட்டது.

# திருமயம் கல் குவாரியில் 6 ஆயிரம் கியூபிக் மீட்டர் கற்கள் கூடுதலாக வெட்டி எடுப்பு ஆய்வில் தகவல்



புதுக்கோட்டை, ஜன.30

புதுக்கோட்டை மாவட் டம் திருமயம் அருகே உள்ள வெங்களூர் கிராமத் தைச் சேர்ந்தவர் ஜகபர் அலி. சமூக ஆர்வலரும், அ.தி.மு.க.நிர்வாகியுமான இவர் புதுக்கோட்டை மாவட்டத்தில் கனிம வளங்கள் கொள்ளையடிக் கப்பட்டு வருவதாகவும், குறிப்பாக திருமயம் கல்கு வாரியில் முறைகேடாக கல்வெட்டி எடுக்கப்படுவ தாக தொடர்ந்து புகார் மனு அளித்து வந்தார்.

இந்த நிலையில் ஜகபர் அலி கடந்த 17ந் தேதி திரு மயம் அருகே உள்ள காட்டு பாவா பள்ளிவாசல் பகுதி யில் தொழுகை முடித்து வீடு திரும்பி வந்து கொண் டிருந்தபோது, லாரி ஏற்றிக் கொல்லப்பட்டார்.

இந்த சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வ லைகளை ஏற்படுத்தியது. இந்த கொலை தொடர்பாக திருமயம் போலீசார் வழக்கு பதிவு செய்து கல் வாரி உரிமையாளர்களான ராசு, ராமையா உள்ளிட்ட 5 பேர் மீது வழக்குப்பதிவு செய்தனர். இதில் ராமைய தவிர மற்ற 4 பே ர்கைது செய்யப்பட்டார்கள். அவர் களை திருமயம் நீதிமன்றத்தில் ஆச்சர்யப்ப டுத்தி சிறையில் அடைத்த னர். அவர்களுக்கு வரும் 3ந் தேதி வரை நீதிமன்ற காவலில் வைத்த நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

ராமையாவை போலீசார் தேடி வந்த நிலையில் நம ணசமுத்திரம் போலீஸ் நிலையத்தில் அவர் சரண் அடைந்தார். இதனி டையே சமூக ஆர்வலர் ஜக பர் அலி குற்றம் சாட்டிய திருமயம் துளையானூர், மலைக்குடிபட்டி பகுதிக ளில்உள்ளகல்குவாரிகளில் புவியியல் மற்றும் சுரங்கத் துறை அதிகாரிகள் 3 நாட்க ளாக ஆய்வு மேற்கொண்ட னர் அனைத்து கல் குவாரிகளும் உரிய அனும தியோடு இயங்குகின்றதா, அனுமதிக்கப்பட்ட அள வில் மட்டும் கற்கள் வெட்டி எடுக்கப்படுகி றதா என்பது குறித்தும், நேரடியாகவும், ட்ரோன் மூலமாகவும் புவியியல் மற்றும் சுரங்கத்துறை அதி காரிகள் ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வு மற்றும் அள விடும் பணி மு டி வ டை ந் த தை தொடர்ந்து சம்பந்தப்பட்ட கல் குவாரிகளில் எவ்வ ளவு தூரம் சட்ட விரோத மாக கற்கள் வெட்டி எடுக் கப்பட்டுள்ளது என்ற அளவீட்டை கனிம வளத் துறை இணை இயக்குன ருக்கு அறிக்கையாக சமர்ப் பித்து உள்ளனர்.

அதில் பல அதிர்ச்சி தக வல்கள் வெளியாகி உள் ளது. ஆய்வு மேற்கொண்ட ராசு மற்றும் ராமையாவுக்கு சொந்த மான குவாரிகளின் ஒப்பந்த காலம் 2023ம் ஆண்டுடன் முடிவடைந்த நிலையில் அந்தக் குவாரிக ளில் சட்ட விரோதமாக பல கோடி ரூபாய் மதிப்பிலான கற்கள் வெட்டி எடுக்கப் பட்டு உள்ளது தெரிய வந் துள்ளது.

ஒவ்வொரு பக்கமும் ஒரு மீட்டர் நீளமுள்ள கன சது ரத்தின் அளவு ஒரு கியூபிக் மீட்டர் ஆகும். அந்த வகை யில் 6 ஆயிரம் கியூபிக் மீட் டர் கற்கள் கூடுதலாக வெட்ட்டி எடுக்கப்பட்டு உள்ளது அதிகாரிகள் சோத னையில் தெரிய வந் துள்ளது.

மேலும் கணக்கீடு பணி யில் குவாரிகளுக்குள் 1500 கியூபிக் மீட்டர் வெட்டப் பட்ட கற்கள் சேமிக்கப் பட்டு உள்ளதும் கண்டுபி டிக்கப்பட்டது.

இந்த அறிக்கையின் மேல் கனிமவளத்துறை இயக்குனர் ஆய்வு செய்து, அதன் பின்னர் என்ன நடவ டிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று புதுக் கோட்டை மாவட்ட கலெக்டருக்கு அறிவுறுத்து வார். அதன் பின்னர் நடவ டிக்கைகள் மேற்கொள்ளப் படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஏ ற் க ன வே புதுக்கோட்டை கனிம வளத்துறை அதிகாரிகள் கடந்த 2 மாதங்களுக்கு முன்பே ராமையாவுக்கு ரூ.6 கோடியே 70 லட்சம் ரூபாய் அபராதமும், ராசுக்கு ரூ.12 கோடி ரூபாய் அபராதமும் விதித்து உள்ள னர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்தில் கைவரிசை காட்டிய டிஜிட்டல் மோசடி கும்பல் கைது

சென்னை, ஜன.30

செ ன் னை திருவான்மியூரைச் சேர்ந்த ஓய்வு பெற்ற மத்திய அரசு அதிகாரி ஒருவரிடம் மும்பை போலீஸ் துறை யில் இருந்து பேசுவதாக கூறி டிஜிட்டல் கைது மூலம் ரூ.88 லட்சம் பறிக் கப்பட்டது.

இந்த மோசடி தொடர் பாக அசாம் மாநிலத்தை சேர்ந்த பிரதீம் போரா என் பவரை போலீசார் கைது செய்தனர். மேலும் அவரு டன் இணைந்து டிஜிட்டல் கைது மோசடியில் ஈடு பட்ட துருபா ஜோதி மஜிம் தார், ஸ்வராஜ்பிரதான், பிர சாந்த் கிரி, பிரஞ்ரல் ஹசாரிகா ஆகிய 4 பேரை போலீசார் கைது செய்த னர். அவர்களிடம் விசா ரணை நடத்தியதில் திடுக் கிடும் தகவல்கள் வெளியானது.

இந்த கும்பல் டெல்லி, கொல்கத்தா, ஜெய்ப்பூர், தமிழ்நாடு, மும்பை, கோவா உள்ளிட்ட பல இடங்களில் ஏஜெண்டு கள் மூலம் பொதுமக்க ளின் செல்போன் எண்கள், அவர்கள் பற்றிய விவரங் களை சேகரித்து பொதுமக் களை ஏமாற்றியும், மிரட் டியும் பணத்தை பறித்து இந்த நூதன மோசடியில் ஈடுபட்டு வந்தனர்.

இது தொடர்பாக அம லாக்கத்துறையும், பண முறைகேடு தடுப்பு சட்டத் தின் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி னார்கள். பல்வேறு இடங் களில் சோதனை நடத்தி ஏராளமான செல்போன் கள், லேப்டாப்கள், ஹார்டு டிஸ்க்குகள் உள் ளிட்டவைகளை பறிமு தல் செய்தனர். இதை ஆய்வு செய்ததில் டிஜிட் டல் கைது மூலம் கிடைக் கும் பணத்தை மோசடி கும்பல் பணம் டெபாசிட் செய்யும் எந்திரங்கள் வாயி லாக பணப்பரிமாற்றம் செய்யும் தனியார் நிறுவ னங்களின் கணக்குக்கு கொண்டு சென்று இருப்ப தும், பின்னர் தங்களது வங்கி கணக்கில் பணத்தை பெற்றிருப்பதும் தெரிய வந்தது.

இதன் தொடர்ச்சியாக வெளிநாட்டு செல்போன் எண்கள் மூலம் கிரிப்டோ கரன்சியில் முதலீடு செய்து அதன் மூலம் கிடைக்கும் பணத்தை இந்தியாவில் இருந்து வெளிநாடுக ளுக்கு கொண்டு சென்றி ருப்பதையும் அமலாக்கத் துறை அதிகாரிகள் கண்டு பிடித்தனர்.

இந்த மோசடியில் மூளையாக செயல்பட்ட ஒருவர் கொல்கத்தாவி லும், மற்றொருவர் டெல் லியிலும் பிடிபட்டு உள்ள னர். அவர்களை கைது செய்த அமலாக்கத்துறை அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகி றார்கள். இந்த வழக்கில் மேலும் பலர் சிக்குவார்கள் என எதிர்பார்க்கப்படுகி றது.

# திருமயம் கல் குவாரியில் 6 ஆயிரம் கியூபிக் மீட்டர் கற்கள் கூடுதலாக வெட்டி எடுப்பு ஆய்வில் தகவல்



திருமங்கலம், ஜன.30

சென்னை ஆயிரம்வி ளக்கு பகுதியில் வெளி நாட்டு இனமான ராட்வீ லர் என்ற நாய் கடித்து குதறியதில் 5 வயது சிறுமி ஒருவர் தலையில் பலத்த காயம் அடைந்தார். இதை யடுத்து ராட்வீலர் என்ற நாய்களை அப்புறப்ப டுத்த மாகராட்சி உத்தர விட்டது.

வெளிநாட்டு நாய்களை வளர்ப்பதில் வழிகாட்டு நெறிமுறைகளை கடைபி டிக்கவும் அறிவுறுத்தப்பட் டது. இருந்தபோதிலும் பலர் செல்லப்பிராணிக ளாக வெளிநாட்டு நாய் இனங்களை வளர்ப்பதை கவுரமாக கொண்டு வளர்த்து வருகிறார்கள். அப்படி வளர்த்த ஒரு நாய் தனது எஜமானரையே கடித்து குதறியுள்ளது.

மதுரை மாவட்டம் திரு மங்கலம் முகம துசாபுரம் 5வது தெருவை சேர்ந் தவர்கள் கண் ணன் ஜ ான் சி ராணி தம்பதியி னர். இவர்கள் தங்களது வீட் டின் மொட்டை மாடியில் 2 வெ ளி நா ட் டு ரக நாய்களை வளர்த்து வரு கின்றனர். ஜான்சி ராணி யின் மகன் சென்னையில் வசித்து வருவதால் தம்பதி யினர் மட்டுமே வீட்டிலிருந்து நாய்களை பராமரித்து வருகின்றனர்.

இந்த நிலையில் காய வைத்த துணிகளை எடுப் பதற்காக மாலை 5 மணி அளவில் ஜான்சிராணி மாடிக்கு சென்றுள்ளார். அப்போது நாயின் அரு கில் இருந்த துணியை எடுக்க முயன்ற போது திடீரென ஒரு நாய் ஜான்சி ராணி மீது ஆக்ரோ ஷமாக பாய்ந்து கடித்து குதறியது. இதில் அவரது இடது கை பலத்த சேதம் அடைந்து சிதைந்து போனது.

கையில் இருந்த எலும்புகள் வெளி யில் தெரியும் அள வுக்கு சதைகளை குதறி எடுத்தது. அவரது அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக் கத்தினர் வந்தாலும், நாய்க்கு பயந்து யாரும் கா ப் பா ற் ற முன்வரவில்லை. பின்னர் ஒரு வழியாக நாயிடம் இருந்து தப்பித்து மாடி யில் இருந்து மெதுவாக ஜான்சிராணி கீழே இறங்கி வந்துள்ளார்.

தொடர்ந்து 108 ஆம்பு லன்ஸ்க்கு தகவல் அளித்து அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். திரு மங்கலம் அரசு மருத்துவம னையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட ஜான்சி ராணி இடது கை மிகவும் சேதம் அடைந்திருந்ததால் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத் துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

சிறுவயதில் இருந்து பழக்கப்பட்ட நாய், வளர்த்த வரையே கடித்து குதறிய சம்பவம் அப்பகு தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. மாடி யில் இருக்கும் நாயை கட் டிப்போட்டு வைக்காத தால் அப்பகுதியில் குடியிருக்கும் அனைவ ரும் வெளியே வர பயந்து வீ ட் டு க் கு ள் ளே யே முடங்கி கிடக்கின்றனர்.

# கடன் தொல்லையால் கணவன், மனைவி, மகள் தற்கொலை



சேலம், ஜன.30

சேலம் அரிசிபாளையம் முத்தையால் தெருவை சேர்ந்தவர் பால்ராஜ் (வயது 46). வெள்ளி பட் டறை உரிமையாளர். இவ ருடைய மனைவி ரேகா (40). இந்த தம்பதியின் மகள் ஜனனி (17). ஒரே மகள் ஆவார். இவர் சேலம் அழகாபுரத்தில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் 11ம் வகுப்பு படித்து வந்தார்.

இந்த நிலையில் பால் ராஜ் தான் வசித்து வந்த இடத்தில் கடந்த 1½ வரு டங்களுக்கு முன்பு வங்கி யில் கடன் வாங்கி புதிய தாக2தளங்களைகொண்ட அடுக்குமாடி வீடு கட்டி னார்.

மேலும் மனைவியும் தனியாக கடன் வாங்கிய தாக கூறப்படுகிறது. இதையடுத்து அந்த வீட் டில் வெள்ளிப்பட்டறை வைத்து தொழில் செய்து வந்தார். இதில் கிடைத்த வருமானத்தை கொண்டு குடும்ப செலவுக்கும், கடன் தொகைக்கும் செல வழித்து வந்தார்.

இதனிடையே அவ ருக்கு தொழிலில் போதிய வ ரு மா ன ம் கிடைக்கவில்லை. இத னால் கடன் தொகையை மாதந்தோறும் செலுத்த முடியாமல் தாமதமானது. கடன் தொகையை குறிப் பிட்ட நாளில் சரியாக கட் டாததால் கடன் தொகை, அபராத வட்டியுடன் சேர்த்து பல மடங்கு அதிக மானது.

இதனால் கணவன்ம னைவி இருவரும் செய்வ தறியாது தவித்தனர். இத னிடையே கடன் தொகையை திரும்பி கேட்டு நெருக்கடி கொடுக் கப்பட்டது. தினமும் குடும்பத்தினர் மன வேத னையில் தவித்தனர்.

நேற்றும் வங்கியை சேர்ந்தவர்கள் வீட்டுக்கு வந்து கடன் தொகை கேட்டு சத்தம் போட்ட னர். அப்போது நாளை (இன்று) கடனை கொடுக்க வேண்டும் என சொல்லி யுள்ளனர்.

இந்த நிலையில் வங்கி யில் கடன் செலுத்த பணம் இல்லாததால் மன வேதனை அடைந்த பால் ராஜ் இரவு உயிரை விட முடிவு எடுத்தார். நேற்று இரவு பால்ராஜ், ரேகா, ஜனனி ஆகிய 3 பேரும் வீட்டின் படுக்கை அறை யில் உள்ள மின் விசிறி கொ க் கி யி ல் தூக்குப்போட்டு தற் கொலை செய்து கொண்ட னர்.

இன்று காலை வெகு நேரமாகியும் வீட்டில் இருந்து யாரும் வெளியே வராததால் வீட்டின் பக்கத் தில் வசிக்கும் உறவினர் சந்தேகம் அடைந்தார். உற வினரின் மகள் வழக்கம் போல் பள்ளிக்கு ஜனனியு டன் செல்வார்.


இதனால் ஜனனியை பள்ளிக்கு கூப்பிட வேண்டி உறவினர் மகள் அவருடைய வீட்டுக்கு சென்றார். அங்கு கதவு திறந்து கிடந்தது. வீட்டின் அறையில் பால்ராஜ், ரேகா, ஜனனி ஆகிய 3 பேரும் சேலையில் தூக் குப்போட்டு தற்கொலை செய்துள்ளதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். உற வினர்கள் வீட்டின் முன்பு திரண்டு கதறி அழுதனர்.

இது பற்றி தகவல் அறிந்த சேலம் மாநகர போலீஸ் தலைமையி டத்து துணை கமிஷனர் கீதா மற்றும் பள்ளப்பட்டி போலீஸ் நிலைய இன்ஸ் பெக்டர் நெப்போலியன் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து தற் கொலை செய்து கொண்ட கணவன்மனைவி, மகள் ஆகிய 3 பேர் உடல்களை யும் மீட்டு பிரேத பரிசோத னைக்காக சேலம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின் றனர்.

மேலும் தடயவியல் நிபு ணர்கள் வரவழைக்கப்பட் டனர். அறையில் கடிதம் இருக்கிறாதா? என சோதனை நடத்தினர். இதில் ஒரு உருக்கமான கடிதம் சிக்கியது. பால் ராஜ் தற்கொலை செய்வ தற்கு முன்பு இந்த கடி தத்தை எழுதியுள்ளார் என்பது தெரியவந்துள் ளது. அந்த கடிதத்தில் உள்ள தகவலை போலீசார் வெளியிட மறுத்து விட்ட னர். அதில் கடன் தொடர் பாக பல்வேறு திடுக்கிடும் தகவல்களை எழுதி வைத் துள்ளதாக கூறப்படுகிறது.

கடன் தொல்லையால் கணவன்மனைவி, மகள் என ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் சேலத்தில் சோகத்தை ஏற் படுத்தியுள்ளது.

# மெரினாவில் படகு கவிழ்ந்து 2 மீனவர்கள் பலி



ராயபுரம், ஜன.30

செ ன் னை திருவல்லிக்கேணி, நடுக் குப்பம் பகுதியை சேர்ந்த வர்கள் பாஸ்கர் (வயது 61), ராஜி (35). மீனவர்கள். இவர்கள் இருவரும் இன்று அதிகாலை ஒரே படகில் நடுக்குப்பம் பகு தியில் உள்ள கடலில் மீன் பிடிக்க சென்றனர்.

அப்போது ராட்சத அலையில் சிக்கிய படகு கடலில் கவிழ்ந்தது. இதில் மீனவர்கள் பாஸ்கர், ராஜி ஆகிய இருவரும் கடலில் மூழ்கினர். சிறிது நேரத் தில் பாஸ்கர், ராஜி ஆகி யோரது உடல்கள் மெரினா கடற்கரை அருகே கரை ஒதுங்கியது. அவர்களது படகு மட்டும் விவேகா னந்தர் இல்லம் அருகே கரை ஒதுங்கியது.

போலீசார் 2 பேரின் உடல்களையும் மீட்டு பிரேத பரிசோதனைக்காக ராயப்பேட்டை அரசு ஆஸ் பத்திரிக்கு அனுப்பி வைத் தனர்.

இதுகுறித்து மெரினா போலீசார் வழக்குப்பதிவு செய்து மேலும் விசாரித்து வருகின்றனர்.

# வங்கியில் 84 பவுன் போலி நகையை அடகு வைத்து மோசடி நகை மதிப்பீட்டாளர் கைது



சேலம், ஜன.30

சேலம் மாவட்டம் கெங் கவல்லியில் ஒரு பொதுத் துறை வங்கி செயல்பட்டு வருகிறது. இந்த வங்கி யில் அந்த பகுதியை சேர்ந்த ஏராளமானோர் கணக்கு வைத்துள்ளனர்.

இந்த வங்கியில் 3 மாதங் களுக்கு ஒரு முறை அடகு நகைகளை சோதனை செய்வது வழக்கம், அதன் படி கடந்த 24ந் தேதி வழக் கம் போல அடமான நகை களைமற்றொருவங்கியின் நகை மதிப்பீட்டாளர்கள் சோதனை செய்தனர்.

அப்போது 6 பாக்கெட் டில் தங்க முலாம் பூசிய கவரிங் நகைகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. கெங்கவல்லியை அடுத்த கூ ட ம லை , கிருஷ்ணாபுரம் பகுதியை சேர்ந்த 2 பேர் கணக் கில் போலி நகைகளை அடகு வைத்து ரூ. 41 லட்சம் பெற்றிருப்பது தெரிய வந்தது.

இது குறித்து வங்கி யின் மேலாளர் மித்ரா தேவி வங்கியில் பணி புரியும் நகை மதிப்பீட் டாளர் பாலசந்தரிடம் விசாரித்தார். அதில் அவர் 84 பவுன் தங்க முலாம் பூசிய போலி நகையை 2 பேரின் பெயரில் வைத்து பணத்தை எடுத்தது தெரிய வந்தது. மேலும் அதில் பாதி பணத்தை திரும்ப செலுத்தி உள்ளார்.

இதுகுறித்து வங்கி மேலாளர் கெங்கவல்லி போலீசில் பாலச்சந்தர் மீது புகார் கொடுத்தார். அதன் பேரில் விசாரணை நடத்திய போலீசார் பாலச் சந்தரை கைது செய்தனர்.

மேலும் வங்கி மேலா ளர் மித்ரா தேவி, உதவி மேலாளர் ஜெகன், வங்கி கேசியர் வேலுசாமி ஆகி யோரிடம் விசாரணை நடத்தி வருகிறார்கள். இத னால் அந்த வங்கியில் நகைகளை அடமானம் வைத்த வாடிக்கையாளர் கள் கலக்கம் அடைந்துள் ளனர்.

நகை மதிப்பீட்டாளர் பாலச்சந்தர் ஏற்கனவே நடுவலூர் வங்கி கிளையில் பல் ே வ று முறைகேடுகளில் ஈடுபட்டதால் கெங் கவல்லி கிளைக்கு மாற்றப்பட்டார். அங்கு 11 ஆண்டுக ளாக பணிபுரிந்த நிலையில் இந்த மாதம் முதல் வாரத்தில் இந்த மோசடியில் ஈடுபட் டது தெரிய வந்தது.

மேலும் பாலச்சந்தர் ரூ.1 கோடி மதிப்பிலான வீடு கட்டியுள்ள நிலை யில் மற்றொரு சொத்து வாங்குவதற்காக போலி நகையை அடகு வைத்து பணம் வாங்கியதும் தெரிய வந்தது. இதுகு றித்து போலீசார் விசா ரணை நடத்தி வருகி றார்கள்.

# குன்னூர் சிம்ஸ் பூங்காவில் கோடை சீசனுக்காக 5 லட்சம் மலர் நாற்றுகள் நடவு ஊழியர்கள் மும்முரம்



குன்னூர், ஜன.30

நீலகிரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் கோடை சீசன் ஏப்ரல் மாதம் இறுதியில் தொடங்கி மே மாதம் வரை நடைபெறும். அப்போது விடுமுறை காலம் என்பதால் தமிழகம் மட்டுமின்றி வெளிமாநிலம்மாவட்டம் மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் ஊட்டி மற்றும் குன்னூருக்கு திரண்டு வருவர்.

தொடர்ந்து அவர்கள் தோட்டக்கலைத் துறைக்கு சொந்தமான பூங்காக்களில் நடைபெறும் மலர்சீசனை கண்டுகளித்தும், இதர சுற்றுலா தலங்களை பார்வையிட்டும் விடுமுறையை கொண்டாடி செல்வது வழக்கம்,

அந்த வகையில் நீலகிரியில் கோடை சீசன் அடுத்த சில மாதங்களில் நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு தோட்டக்கலைத்துறை பூங்காக்களுக்கு வரும் சுற்றுலா பயணிகளை உற்சாகப்படுத்தும் வகையில், அங்கு தற்போது பல்வேறு வகையான மலர்ச்செடிகளை நடவு செய்யும் பணிகள் தொடங்கி உள்ளன.

இதில் ஒருபகுதியாக குன்னூர்சிம்ஸ்பூங்காவில் கோடை சீசனை முன்னிட்டு 5 லட்சம் மலர் செடிகளை நடவுசெய்வதென தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் திட்டமிட்டு உள்ளனர்.

இதற்காக அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ், ஜெர்மனி, நெதர்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து 35க்கும் மேற்பட்ட மலர் செடி வகைகள் மற்றும் 130 வகையில் மலர்நாற்றுகள் வரவழைக்கப்பட்டு உள்ளன. தொடர்ந்து சிம்ஸ்பூங்காவில் கோடை சீசனுக்கான மலர் நாற்றுகளை நடவு செய்யும் பணிகளின் தொடக்க விழா நடைபெற்றது. இதில் மாவட்ட தோட்டக்கலை துறை இணை இயக்குனர் சிபிலாமேரி கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைத்தார். இதில் குன்னூர் தோட்டக்கலைதுறை உதவி இயக்குனர் பிரபு, துணை இயக்குனர் அப்ரேஸ்பேகம், தோட்டக்கலைத்துறை அலுவலர் லட்சுமணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து குன்னூர் சிம்ஸ் பூங்காவில் சால்வியா, டேலியா, ஆண்ட்ரினம், பால்சம், பெகோனியா, மேரிகோல்ட், பிரெஞ்ச் மேரிகோல்ட், பேன்சி, காஸ்மாஸ், டேலியா, ஜினியா, லூபின், கேலன்டுல்லா உள்ளிட்ட பல்வேறு வகையான மலர் நாற்றுகளை நடவு செய்யும் பணிகளில் தோட்டக்கலைத்துறை ஊழியர்கள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

# மகா கும்பமேளா: சென்னை, பிரயாக்ராஜ் விமான கட்டணம் ரூ.59 ஆயிரம் வரை அதிகரிப்பு

சென்னை, ஜன.30

உத்தரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் மகா கும்பமேளா கடந்த 13ந்தேதி தொடங்கி 45 நாட்கள் நடைபெறுகிறது.

இந்த விழாவில் 3 நதிகள் சேரும் திரிவேணி சங்கமத்தில் நீராட உலகம் முழுவதும் இருந்து கோடிக்கணக்கான பக்தர்கள் குவிந்த வண்ணம் உள்ளனர்.

இதையடுத்து நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து பிரயாக்ராஜ் நகருக்கு செல்லும் விமானங்களில் கட்டணம் பலமடங்கு உயர்ந்து உள்ளது.

இதேபோல் சென்னையில் இருந்து செல்லும் விமானங்களிலும் கட்டணம் எகிறி உள்ளது. அமாவாசை திதி நாளை வரும் நிலையில் இன்று முதல் 3 நாட்களுக்கு சென்னையில் இருந்து பிரயாக்ராஜ் செல்ல விமான கட்டணம் ரூ.59 ஆயிரம் வரை உயர்ந்துள்ளது குறிப்பிடத்த க்கது.

# திருப்பூரில் சட்டவிரோதமாக தங்கியிருந்த வங்கதேசத்தினர் மேலும் 15 பேர் கைது

திருப்பூர், ஜன.30

தமிழகத்திற்குள் ஊடுருவி உள்ள வங்கதேசத்தினர், மேற்கு வங்க மாநிலத்தவர் போல் போலி ஆவணங்கள்தயார்செய்து திருப்பூர் பனியன் நிறுவனங்களில் பணியாற்றி வருகின்றனர்.

அவர்களைகைதுசெய்ய உள்ளூர்போலீசார்மற்றும் என்.ஐ.ஏ., எனப்படும் தேசியபுலனாய்வுமுகமை அதிகாரிகள் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த ஒரு வாரத்தில்திருப்பூர்மாவட்டத்தில் மட்டும் 63 வங்கதேசத்தினர்கைது செய்யப்பட்டனர். தொடர்ந்து மாநகர்மற்றும்மாவட்டம் முழுவதும் சோதனை நடத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் திருப்பூர்மாநகரபோலீஸ்கமிஷனர் ராஜேந்திரன் உத்தரவின் பேரில் பனியன் நிறுவனங்களில் போலீசார் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர். நல்லூர் போலீஸ் நிலையத்திற்குட்பட்ட வள்ளியம்மை நகர், ராக்கியாபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பனியன் நிறுவனங்களில் சோதனை செய்த போது அங்கு பணியில் ஈடுபட்டிருந்த வங்கதேசத்தினர் 11 பேரை கைது செய்தனர். திருமுருகன்பூண்டி பகுதியில் 4 பேரை கைது செய்தனர். இவர்கள் போலி ஆதார்அட்டை உள்ளிட்ட ஆவணங்களை தயாரித்து திருப்பூர் பனியன் நிறுவனங்களில் பணியாற்றி வந்தது கண்டுபிடிக்கப்பட்டது. திருப்பூரில் பதுங்கியிருந்த வங்கதேசத்தினர் மேலும் 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இது குறித்து போலீசார் கூறுகையில், பிப்ரவரி மாத இறுதிக்குள் வங்கதேசத்தினர் ஒருவர் கூட தமிழகத்தில் இல்லை என்பதை உறுதி செய்யும் வகையில் நடவடிக்கையை தீவிரப்படுத்தி உள்ளோம் என்றனர்.

# மாணவர்களுக்கான காலை உணவு திட்ட ஒப்பந்தத்தை தனியாருக்குத் தாரைவார்க்க முயற்சிப்பது ஏன்?: அண்ணாமலை




சென்னை, ஜன. 30

சென்னையில் உள்ள சுமார் 350க்கும் அதிகமான பள்ளிகளில், சுமார் 65,000க்கும் அதிகமான மாணவர்களுக்கான காலை உணவுத் திட்டத்திற்கு அம்மா உணவகங்களில் உணவு தயார் செய்யப்படுகிறது. இதன் மூலம், அம்மா உணவகங்களில் பணிபுரிவோருக்கு நிலையான வருமானம் கிடைக்கப்பெற்று வந்தது.

கடந்த 2023ம் ஆண்டு காலை உணவுத் திட்டத்திற்கான ஒப்பந்தத்தை தனியாருக்கு கொடுக்க சென்னை மாநகராட்சி முயன்றபோது மாமன்றத்தில் கடும் எதிர்ப்பு எழுந்ததால் அந்த முடிவைக்கைவிட்டனர். தற்போது மீண்டும் தனியாருக்குத் தாரை வார்க்க ஒப்பந்தம் கோரி இருக்கின்றனர்.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் அம்மா உணவகங்களை மேம்படுத்த ரூ.21 கோடி நிதி ஒதுக்கியதாக அறிவித்தது திமுக அரசு. அப்படி மேம்படுத்தப்பட்ட அம்மா உணவகங்களில், பள்ளி மாணவர்களுக்கான உணவை தயாரிக்காமல், தனியாருக்குத் தாரை வார்க்க இரண்டு ஆண்டுகளாக முயற்சிப்பது ஏன்?

கண்துடைப்புக்காகத் திட்டங்கள் அறிவிப்பது அல்லது தங்கள் லாப நோக்கங்களுக்காகத் திட்டங்களை மடைமாற்றுவது என, நான்கு ஆண்டுகளாக டிராமாமாடல் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் திமுக, சென்னை மாநகராட்சியையும், பள்ளிக் குழந்தைகளையும் அதற்குப் பயன்படுத்த முயற்சிப்பதை வன்மையாகக் கண்டிக்கிறேன். தொடர்ந்து அம்மா உணவகங்களிலேயே, காலை உணவுத் திட்டத்திற்கான உணவு தயாரிக்கப்பட வேண்டும் என்றும், தனியாருக்குஒப்பந்தம்வழங்க முயற்சிப்பதை கைவிட வேண்டும் என்றும், சென்னைமாநகராட்சியை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அண்ணாமலை குறிப்பிட்டுள்ளார்.

# திண்டுக்கல் அரசு ஆஸ்பத்திரியில் 9 மாத குழந்தைக்கு கண்புரை அறுவை சிகிச்சை



திண்டுக்கல், ஜன.30

திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் அப்பனம்பட்டியை சேர்ந்தவர் அரவிந்த்குமார். இவரது 9 மாத ஆண் குழந்தைக்கு பிறவியிலேயே கண்பார்வை சரியில்லாமல் கண்ணில் கண்புரை இருந்தது. இதனால் அரவிந்த்குமார் குழந்தையை திண்டுக்கல் அரசு ஆஸ்பத்திரியில் குழந்தைகள் பிரிவில் சிகிச்சைக்காக சேர்த்தார்.

குழந்தையை பரிசோதித்த டாக்டர்கள் கண்புரை பிரச்சனை இருப்பதை கண்டறிந்து கண்பிரிவு டாக்டர்களை சிகிச்சையளிக்க பரிந்துரைத்தனர். கண்பார்வை பிரிவு டாக்டர்கள் குழந்தைக்கு லென்ஸ் பொருத்தலாமா? என ஆலோசித்தனர். ஆனால் 2 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு தான் லென்ஸ் சிகிச்சை செய்ய முடியும் என்பதால் தற்போது கண்புரை அறுவை சிகிச்சை செய்ய முடிவு செய்தனர்.

முதலில் வலது கண்ணில் சிகிச்சைசெய்தனர். ஆரோக்கியமான நிலையில் குழந்தைக்கு கண் பார்வையும் கிடைத்தது. மீண்டும் 1 மாதம் கழித்து இடது கண்ணில் அறுவை சிகிச்சை செய்ய முடிவு செய்து, 2 வருடம் கழித்து லென்ஸ் பொருத்தவும் திட்டமிட்டனர்.

திண்டுக்கல் அரசு ஆஸ்பத்திரியில் முதல் முறையாக 9 மாத குழந்தைக்கு கண்புரை அறுவை சிகிச்சை செய்துள்ளதால் ஆஸ்பத்திரி நிர்வாகத்தினர் அறுவை சிகிச்சை குழுவில் உள்ள குழந்தைகள், மயக்கவியல், கண்பார்வை போன்ற பிரிவுகளை சேர்ந்தவர்கள் டாக்டர்களை பாராட்டினர்.

# மிஸ்டர் ஹவுஸ் கீப்பிங் படம் எப்படி இருக்கிறது? விமர்சனம்



பிரபலமானதயாரிப்பு நிறுவனமான ஸ்ரீ தேனாண்டாள் பிலிம்ஸ் தங்களின் 101வது படமாக 'மிஸ்டர் ஹவுஸ் கீப்பிங்' படத்தை தயாரித்துள்ளது. இந்த படத்தில் பிக்பாஸ் நிகழ்ச்சியில் பங்கேற்றதன் மூலம் பிரபலமடைந்த லாஸ்லியா கதாநாயகியாக நடித்துள்ளார். மேலும் இப்படத்தில் ஹரி பாஸ்கர் கதாநாயகனாக நடித்துள்ளார். கடந்த 24ந் தேதி வெளியான இப்படத்தை அருண் ரவிச்சந்திரன் இயக்கியுள்ளார்.

இந்த நிலையில், ஹரி பாஸ்கர் நடித்துள்ள 'மிஸ்டர் ஹவுஸ் கீப்பிங்' படம் எப்படி இருக்கிறது என்பதை காண்போம்.

கல்லூரியில் படிக்கும் ஹரி பாஸ்கர் சக மாணவி லாஸ்லியாவை காதலிக்கிறார். லாஸ்லியாவோ காதலை ஏற்க மறுக்கிறார். படிப்பை முடித்து நான்கு வருடங்களுக்கு பிறகு பணத்துக்காக ஒரு வீட்டுக்கு ஹவுஸ் கீப்பிங் வேலைக்கு செல்லும் ஹரிபாஸ்கர் அந்த வீட்டு உரிமையாளராக லாஸ்லியாவை பார்த்து அதிர்கிறார்.

ஹரி பாஸ்கர் மீது அனுதாபப்பட்டு தனது கம்பெனியிலேயே வேலை வாங்கி கொடுக்கிறார் லாஸ்லியா. அதோடு தன்னுடன் வேலை பார்க்கும் ரயானை காதலித்து திருமணம் செய்து கொள்ளவும் லாஸ்லியா நிச்சயம் செய்கிறார். ஆனால் லாஸ்லியா தன்னை காதலிப்பதாக ஹரிபாஸ்கர் தவறாக நினைத்து தனக்கு நிச்சயமான திருமணத்தை நிறுத்துகிறார். இதனால் ஏற்படும் பிரச்சினைகள் என்ன? ஹரி பாஸ்கர் காதல் கைகூடியதா? என்பது மீதி கதை.

ஹரி பாஸ்கர் துறுதுறுவென வருகிறார். காதல், காமெடியில் அவரது உடல் மொழிகள் ரசிக்க வைக்கின்றன. லாஸ்லியாவுக்கு முக்கிய வேடம். அதை உணர்ந்து நேர்த்தியான நடிப்பை வழங்கி உள்ளார் காதல், கோபம், ஏமாற்றம், சோகம் மகிழ்ச்சியில் உணர்வுகளை நுணுக்கமாக வெளிப்படுத்தி கவனம் ஈர்க்கிறார்.

ரயான் இயல்பான நடிப்பை வழங்கி இருக்கிறார். ஹரி பாஸ்கர் அப்பா கதபாத்திரத்தில் இளவரசு அசத்துகிறர். அம்மாவாக வரும் உமா ராமச்சந்திரனும் நிறைவு. காமெடி ஏரியாவை ஷாரா கலகலப்பாக நகர்த்துகிறார். கதை முடியும் நிலையிலும் தொடர்ந்து நீள்வது பலகீனம்.

ஓஷே வெங்கட் இசை காட்சிகளோடு ஒன்ற வைத்துள்ளது. குலோத்துங்கன் கேமரா கல்லூரி, ஐடி கம்பெனி, வீடு என்று கதைக்களங்களை அழகாக படம் பிடித்துள்ளது. இந்த கால காதல் அணுகு முறைகளை நேர்த்தியாகவும், சுவாரஸ்யமாகவும் சொல்லி இளைய தலைமுறைக்கு பிடிக்கும் படமாக கொடுத்து இருக்கிறார், இயக்குனர் அருண் ரவிச்சந்திரன்.

# சாய் பல்லவி நடித்துள்ள 'தண்டேல்' படத்தின் டிரெய்லர் வெளியானது




தெலுங்கு சினிமாவில் முன்னணி நடிகராக வலம் வருபவர் நாக சைதன்யா. இவரது நடிப்பில் வெளியாக உள்ள படம் 'தண்டேல்'. இதில், சாய் பல்லவி கதாநாயகியாக நடித்துள்ளார். 'கார்த்திகேயா 2' திரைப்படத்தின் மூலம் பிரபலமான சந்து மொண்டேட்டி இப்படத்தை இயக்கியுள்ளார்.

கீதா ஆர்ட்ஸ் சார்பில் பன்னிவாஸ் தயாரித்திருக்கும் இப்படத்திற்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைத்துள்ளார். ஸ்ரீகாகுளத்தில் உள்ள மீனவர்களின் உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு இப்படம் உருவாகி உள்ளது.

இந்நிலையில் 'தண்டேல்' திரைப்படத்தின் டிரெய்லரை படக்குழு வெளியிட்டுள்ளது.

'தண்டேல்' படம் பிப்ரவரி 7ம் தேதி தமிழ், தெலுங்கு மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் வெளியாக உள்ளது.

# 4 நாட்களில் குடும்பஸ்தன் படத்தின் வசூல் எவ்வளவு தெரியுமா?




தமிழ் சினிமாவில் 'ஜெய் பீம், லவ்வர், குட் நைட்' போன்ற படங்களில் நடித்து பிரபலமானவர் மணிகண்டன். இவரது நடிப்பில் கடந்த 24ந் தேதி வெளியான படம் 'குடும்பஸ்தன்'. இப்படத்தை சினிமாக்காரன் நிறுவனம் தயாரிப்பில் நக்கலைட்ஸ் யூடியூப் இயக்குனர் ராஜேஷ்வர் காளிசாமி இயக்கியிருக்கிறார். இந்த படத்தில் மணிகண்டன் உடன் இணைந்துசான்விமேக்னா, குருசோமசுந்தரம், ஆர்சுந்தர்ராஜன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருக்கின்றனர். இந்த படத்திற்கு வைஷாக் இசையமைத்துள்ளார்.

மிடில் கிளாஸ் குடும்பத்தில் இருக்கும் ஒரு இளைஞனின் வாழ்க்கையில் நடைபெறும் சம்பவங்கள் சுவாரசியுங்கள் என அனைத்தையும் இந்த திரைப்படத்தில் காட்சிப்படுத்தி இருக்கின்றனர். இப்படம் விமர்சன ரீதியாகவும் வசூல் ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

இந்தநிலையில், குடும்பஸ்தன் திரைப்படம் 4 நாட்களில் ரூ.8.7 கோடி வசூல் செய்துள்ளதாக கூறப்படுகிறது.

# இங்கிலாந்துக்கு எதிரான 3வது டி20: தோல்விக்குப்பின் இந்திய அணியின் கேப்டன் கூறியது என்ன..?



இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் 2 போட்டிகளில் இந்திய வெற்றி பெற்று தொடரில் 20 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது. இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கு இடையிலான 3வது டி20 போட்டி நேற்று நடைபெற்றது.

இதில் டாஸ் வென்ற இந்திய கேப்டன் சூர்யகுமார் யாதவ் பந்து வீச்சை தேர்ந்தெடுத்தார். அதன்படி முதலில் பேட்டிங் செய்த இங்கிலாந்து அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுக்கு 171 ரன்கள் சேர்த்தது. அதிகபட்சமாக பென் டக்கெட் 51 ரன்கள் அடித்தார். இந்திய தரப்பில் வருண் சக்ரவர்த்தி 4 ஓவர்களில் 24 ரன்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுகளை அள்ளினார்.

பின்னர் 172 ரன்கள் இலக்கை நோக்கி ஆடிய இந்திய அணி சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. முன்னணி வீரர்களான சாம்சன் (3 ரன்கள்), சூர்யகுமார் யாதவ் (14 ரன்கள்), திலக் வர்மா (18 ரன்கள்) சொதப்பியது அணிக்கு பின்னடைவாக அமைந்தது.

20 ஓவர்கள் முழுமையாக விளையாடிய இந்திய அணி 9 விக்கெட்டுகளை இழந்து 145 ரன்கள் மட்டுமே அடித்தது. இதனால் இங்கிலாந்து 26 ரன்கள் வித்தியாசத்தில் நடப்பு தொடரில் முதல் வெற்றியை பெற்றது. இந்தியா தரப்பில் அதிகபட்சமாக ஹார்திக் பாண்ட்யா 40 ரன்கள் அடித்தார். இங்கிலாந்து தரப்பில் ஜாமி ஓவர்டான் 3 விக்கெட்டும், ஜோப்ரா ஆர்ச்சர், பிரைடன் கார்ஸ் தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர். அந்த அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான அடில் ரஷீத் ஒரு விக்கெட்டை மட்டுமே வீழ்த்தியிருந்தாலும் சிக்கன பந்துவீச்சை (4 ஓவரில் 15 ரன்கள்) வெளிப்படுத்தி இருந்தார்.

இந்நிலையில் இந்த போட்டியில் தாங்கள் அடைந்த தோல்வி குறித்து இந்திய அணியின் கேப்டன் சூர்யகுமார் யாதவ் பேசுகையில், "நாளின் பிற்பகுதியில் கொஞ்சம் பனி இருக்கும் என்று நினைத்தேன். ஹார்திக் மற்றும் அக்சர் பேட்டிங் செய்தபோது ஆட்டம் எங்கள் கைகளில் இருந்தது என்று நினைக்கிறேன். ஆனால் அதை மாற்றிய பெருமை அடில் ரஷீத்தை சாரும். அவர் மிகவும் சிறப்பாக பந்து வீசினார். அதனால்தான் அவர் உலகத்தரம் வாய்ந்த பந்துவீச்சாளராக இருக்கிறார். அவர் எங்களை 1, 2 ரன்கள் வீதம் எடுத்து ஸ்ட்ரைக்கை மாற்ற அனுமதிக்கவில்லை. அதனால்தான் எங்கள் அணியிலும் நிறைய ஸ்பின்னர்கள் இருந்தனர்.

டி20 போட்டிகளிலிருந்து நாங்கள் எப்போதும் ஏதாவது கற்றுக்கொள்கிறோம். பேட்டிங்கில் என்ன தவறு செய்தோம் என்பதை இந்த போட்டியிலிருந்து நாங்கள் பார்க்க வேண்டும். தவறுகளிலிருந்து நாங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். ஷமி எதிர்காலத்தில் சிறப்பாக செயல்படுவார் என்று நான் நம்புகிறேன். அவர் (வருண் சக்ரவர்த்தி) பயிற்சிகளின்போது மிகவும் கடினமாக உழைத்து வருகிறார். அந்த கடின உழைப்பின் விளைவாக அவர் களத்தில் சிறந்த முடிவுகளைப் பெறுகிறார்" என்று கூறினார்.

# இந்திய முன்னாள் வீரர் மீது பி.சி.சி.ஐ.யிடம் ரோகித் சர்மா புகார்.. என்ன நடந்தது..?

சமீபத்தில் நடந்த நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலிய டெஸ்ட் தொடர்களில் இந்திய அணி தோல்வி கண்டது. இதில் பேட்ஸ்மேனாக மட்டுமின்றி கேப்டன்ஷிப்பிலும் சொதப்பிய ரோகித் சர்மா தோல்விக்கு முக்கிய காரனமானார். இதனால் அவர் மீது கடுமையான விமர்சனங்கள் எழுந்தன. குறிப்பாக இந்திய முன்னாள் வீரர் சுனில் கவாஸ்கர் கடுமையாக விமர்சித்தார். மேலும் ரோகித் சர்மாவின் கேப்டன்சி குறித்தும் அவர் பல விமர்சனங்களை முன்வைத்தார். இதனிடையே உள்ளூர் போட்டிகளில் கிரிக்கெட் வாரியத்தின் ஒப்பந்த வீரர்கள் அனைவரும் கட்டாயம் பங்கேற்க வேண்டும் என்று பி.சி.சி.ஐ. அறிவுறுத்தியது.

இதனையடுத்து ரோகித் சர்மா ரஞ்சி கோப்பையில் மும்பை அணி தரப்பில் களமிறங்கினார். ஜம்மு காஷ்மீர் அணிக்கு எதிரான மும்பையின் ஆட்டத்தில் களமிறங்கிய ரோகித் சர்மா 2 இன்னிங்ஸ்களில் முறையே 3,28 ரன்கள் அடித்து ஏமாற்றத்தை கொடுத்தார்.

இதனால் ரோகித் சர்மா ரஞ்சி கோப்பையிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை என்று கவாஸ்கர் மீண்டும் விமர்சித்தார்.

இப்படி அடுக்கடுக்கான விமர்சனங்களால் கோபமடைந்த ரோகித் சர்மா, சுனில் கவாஸ்கர் மீது இந்திய கிரிக்கெட் வாரியத்திடம் (பி.சி.சி.ஐ.) புகார் தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. தன்னை தேவையில்லாமல் விமர்சிப்பதாகவும், குறிப்பாக ரஞ்சி கோப்பையில் தனது ஈடுபாட்டை குறைசொல்வது நியாயமற்றது என்றும் இத்தகைய விமர்சனங்கள்தனக்குஅழுத்தத்தைகொடுப்பதாகவும் ரோகித்சர்மா, பி.சி.சி.ஐ. யிடம் கூறியுள்ளதாகதகவல் வெளியாகியுள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.